## பாடம்: 4 - திருக்குறள் கதைகள்

**வகுப்பு** : III

**பாடம்** : **தமிழ்**

### அ. கடினச் சொற்கள்

1. நீதிபதி
2. திருக்குறள்
3. அரசாங்கம்
4. கடுங்காவல்
5. மரியாதை
6. விவசாயி
7. பறவை
8. வையகம்

### ஆ. பொருள் எழுதுக.

1. ஞாலம் - உலகம்
2. அறம் - தருமம்
3. அணி - அணிகலன்
4. என்பு - எலும்பு
5. கேடில் - அழிவில்லாத

### இ. திருக்குறளும் அதன் விளக்கமும்

**1. நடுவுநிலைமை , குறள் 114**

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்

**விளக்கம்:** ஒருவர் நடுவு நிலைமை உடையவர், இல்லாதவர் என்பது அவருக்குப் பின் நிலைத்து நிற்கும் புகழாலும் பழியாலும் அறியப்படும்.

**2. காலமறிதல், குறள் 484**

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்

**விளக்கம்:** செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தை அறிந்து இடத்தோடு பொருந்துமாறு செய்தால் உலகமே வேண்டும் எனக் கருதினாலும் அது கைகூடும்.

**3. அன்புடைமை, குறள் 77**

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்

**விளக்கம்:** எலும்பு இல்லாத உயிரை வெயில் காய்ந்து வருத்தும். அதுபோல அன்பு இல்லாத உயிர்களை அறம் வருத்தும்.

4. **கல்வி, குறள் 400**

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

**விளக்கம்:** ஒருவருடைய நிலைத்த செல்வம் என்பது அவர் கற்ற கல்வியே ஆகும். அதனைத் தவிர வேறு எந்த செல்வமும் நீடித்து இருக்காது.

## புத்தகப் பயிற்சி வினாக்கள்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. 'ஞாலம்' இச்சொல்லுடன் பொருந்தாத சொல் ____
   அ) உலகம் ஆ) வையகம் இ) புவி **ஈ) மலை**
2. கீழ்க்காணும் சொற்களுள் மாறுபட்ட பொருள் தருவது______
   அ) அறம் **ஆ) தீமை** இ) கொடை ஈ) ஈகை
3. 'என்பு' இச்சொல்லிற்குப் பொருத்தமான சொல் ____
   அ) முகம் **ஆ)எலும்பு** இ) கை ஈ) கால்
4. 'நல்ல + செயல்' இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________
   அ) நல்லசெயல் ஆ) நல்செயல் **இ)நற்செயல்** ஈ) நல்லச்செயல்
5. 'இன்சொல்' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____
   **அ) இனிமை+சொல்** ஆ) இன்+சொல் இ)இன்மை+சொல் ஈ) இனிமை+செல்

### ஆ. குறட்பாக்களில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக

1. என்பிலதனை - அன்பிலதனை
2. ஞாலம் - காலம்

### இ. முறைமாறி உள்ள சீர்களை வரிசைப்படுத்து எழுதுக

1. இன்சொலன் பணிவுடையன் ஒருவற்கு ஆதல்
   பிற மற்றுப் அணியல்ல
   **பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
   **அணியல்ல மற்றுப் பிற.**
2. தகவிலர் தக்கார் அவரவர் என்பது
   படும் எச்சத்தாற் காணப்
   **தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
   **எச்சத்தாற் காணப் படும்.**

KNOWLEDGE IS POWER